**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், தேவகோட்டை.**

**முன்னிலை: திரு.எஸ்.கணேசன்., பி.எஸ்ஸி., எம்.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி. தேவகோட்டை.**

**2015ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15-ம் நாள் செவ்வாய்க்கிழமை.**

**மு.வ.எண்.110/2015**

.......

முத்தையா ...... வாதி.

..... எதிர்.....

1. முத்துராமலிங்கம்
2. பெருமாள்
3. கருப்பையா ...... பிரதிவாதிகள்.

இவ்வழக்கானது 30.11.2015ம் தேதியன்று என் முன்பாக இறுதி விசாரணைக்காக வந்த பொழுது வாதிக்காக வழக்குரைஞர் திரு.வி.சுந்தர் அவர்கள் ஆஜராகியும், பிரதிவாதிகளை நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாததால் ஒருதலைபட்சமாக்கப்பட்டுள்ள நிலையில், வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள சாட்சி மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையிலும், இவ்வழக்கு சம்பந்தப்பட்ட ஆவணங்களை ஆய்வு செய்தும், இது நாள் வரையில் இவ்வழக்கு இந்நீதிமன்றத்தின் பரிசீலனையில் இருந்து வந்த பின் இன்று இந்நீதிமன்றம் வழங்கும்.....

**தீ ர் ப் பு ரை**

தாவாச் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், அதற்கு அனுசரனையாக தாவா சொத்தில் வாதியின் அமைதியான அனுபவத்தை பிரதிவாதிகளோ அவரது வகையாட்களோ எவ்வகையிலும் தடையிடர் செய்யக்கூடாது என்று நிரந்தர உறுத்துக்கட்டளை பிறப்பித்தும், இவ்வழக்கின் செலவுத் தொகையை வாதிக்கு பிரதிவாதி வழங்க உத்தரவிடக் கோரியும் வாதிகளால் இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2. வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையின் சுருக்கம்:-**

தாவாச் சொத்துக்கள் இந்த வழக்கின் 1ம் பிரதிவாதிக்கு பூர்வீக பாத்தியமாக இருந்து கடந்த 04.04.1992-ம் தேதி தேவகோட்டை தாலுகா, கண்ணங்குடி அஞ்சல், சிறுவாச்சி பஞ்சாயத்து, கூத்தனி கிராமத்திலிருக்கும் சுப்பையா மகன் காசி அவர்களிடம் ரூ.8160/-க்கு பதிவில்லா கிரயம் மூலம் கிரையம் பெறப்பட்டு அது முதல் தாவாச் சொத்துக்களை மேற்கண்ட சுப்பையா மகன் காசி சுவாதீனம் செய்து வந்தார். மேற்கண்ட காசி அவர்களுக்கு சுமார் 28 வருடங்களுக்கு முன்பு

ஆனையடியைச் சேர்ந்த பெருமாள் மகள் மல்லிகா என்பவருக்கும் ஜாதி வழக்கப்படியும், சம்பிராதயப்படியும் திருமணம் நடைபெற்றது. மேற்கண்ட காசியும், மல்லிகாவும் சந்தோஷமாக வாழ்ந்து வந்த நிலையில் ஷையாருக்கு குழந்தைகள் எதுவும் கிடையாது. அதுசமயம் காசி-மல்லிகா தம்பதியினரது சொத்துக்களை பராமரிப்பதற்கும், பாதுகாப்பதற்காகவும், வாரிசுக்காகவும், சுவீகாரம் எடுக்கலாம் என்ற நிலையில் 1997-ம் வருடம் காசி அவர்கள் இறந்து விட்டார். அதனால் மேற்கண்ட மல்லிகா மேற்கண்ட காசியின் பூர்வீக ஊரான தேவகோட்டை தாலுகா, கப்பலூர் குரூப், கூத்தனி கிராமத்திலேயே தனது கணவருக்கு பாத்தியமான நஞ்சை, புஞ்சை, வீடு, தோட்டம், துரவு ஆகியவற்றை தானே அனுபவம் செய்து வந்தார். மேற்கண்ட காசி அவர்களுக்கு தாவாச் சொத்துக்கள் தவிர வேறு சொத்துக்கள் கூந்தனி கிராமத்தில் பூர்வீக பாத்தியமாக இருந்தது என்பதற்காக அரசாங்கத்திடமிருந்து நிலஉடைமை குறிப்பேடு பட்டா எண்.156-க்கு 04.01.1974ம் தேதி வழங்கப்பட்டுள்ளது. தாவாச் சொத்தை தவிர வேறு சொத்திற்கு UDR திட்டத்தில் மேற்கண்ட காசி பெயருக்கு அரசாங்கத்தால் UDR பட்டா கடந்த 20.07.1987-ம் தேதி வழங்கப்பட்டுள்ளது. 14.06.2002ம் தேதி மேற்கண்ட காசிக்கு பாத்தியப்பட்ட அனைத்துச் சொத்துக்களும் காசியின் மனைவி மல்லிகா பெயருக்கு பட்டா பாஸ்புத்தகம் அலகு1 திட்டத்தின் கீழ் பட்டா மாறுதல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

3) கடந்த 25.01.2007ம் தேதி தாவா சொத்து தவிர வேறு சொத்துக்களுக்கு மேற்கண்ட காசி இறந்து விட்டதால் காசி மனைவி மல்லிகா பெயரில் ஷை தேதி 10(1) கம்ப்யூட்டர் பட்டா. மேலும் மேற்கண்ட மல்லிகாவிற்கு அரசாங்கத்தால் 2005-ம் ஆண்டு குடும்ப அட்டை வழங்கப்பட்டுள்ளது. மேலும் ஷையாருக்கு இந்திய தேர்தல் ஆணையம் அடையாள அட்டையும் வழங்கியுள்ளது. ஷையார் கண்ணங்குடி IDBI வங்கியில் சேமிப்பு கணக்கு தொடங்கியுள்ளார். மேலும் தேவகோட்டை சிட்டி யூனியன் வங்கி மற்றும் பாண்டியன் கிராம வங்கிகளில் சேமிப்பு கணக்கு தொடங்கி அதற்கு பாஸ்புத்தகமும் வைத்துள்ளார். ஷையார் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டப்படி வேலை செய்ததற்கான தனிநபர் வேலைக்கான அட்டையும் பெற்றுள்ளார் ஷையார் பெயருக்கு அரசாங்கத்தால் ஆதார் அடையாள அட்டை வழங்கப்பட்டுள்ளது. மற்றும் முதலமைச்சரின் விரிவான

மருத்துவ காப்பீடு திட்டத்தின் மூலம் உறுப்பினர் அடையாள மற்றும் உயிர்காக்கும் உயர்சிகிச்சைக்கான கலைஞர் காப்பீட்டுத் திட்டம் அடையாள அட்டை மற்றும் சிட்டி யூனியன் வங்கியின் ATM கார்டு, மேலும் முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத் திட்டத்தில் வழங்கியுள்ள அட்டைகள் வழுஙகப்பட்டுள்ளது. மல்லிகா தான் குடியிருக்கும் வீட்டிற்கு வீட்டுவரி கட்டியுள்ளார். மேலும் மல்லிகாவிற்கு தேவகோட்டை வட்டாட்சியர் அவர்கள் நி.மு.அ.5/84/2012-ல் கணவனை இழந்த விதவை என்பதற்காக உதவித்தொகையாக ரூ.1,000/- பெற்றுள்ளதற்கான உத்தரவு தனிவட்டாட்சியர் (ச.பா.தி.) தேவகோடடை அவர்களால் வழங்கப்பட்டுள்ளது.

4) மல்லிகா கடந்த 28.07.2012-ம் தேதியன்று தமக்கு அடிக்கடி நெஞ்சுவலி வருவதாலும், உடல்நிலை மிகவும் பலஹீனமாக உள்ளதாலும், மேற்படியாரை ஷையாரின் கணவரின் சகோதரி காந்தி என்பவரின் மகனான இந்த வழக்கின் வாதி மருத்துவமனை கூட்டிச் சென்று காண்பித்து மேற்கண்ட மல்லிகாவை பாதுகாத்தும், பராமரித்தும் வந்தார். அதனடிப்படையில் மேற்கண்ட மல்லிகாவிற்கு பாத்தியப்பட்ட அனைத்து சொத்துக்களுக்கும் வாரிசாக மேற்கண்ட வாதியை நியமனம் செய்வதற்காகவும், மல்லிகாவின் ஆயுள் காலத்திற்கு பின்னீடு முத்தையாவே தாவா சொத்துக்கள் மற்றம் வேறு பல சொத்துக்களையும் வாரிசு அன்னியில் ஆண்டு அனுபவித்து கொள்ள வேண்டும் என்றும், சாட்சிகள் முன்னிலையில் ஒரு உயில் சாசனம் எழுதி வைத்துள்ளார். அதன் பீன்னீடு மேற்கண்ட மல்லிகா கடந்த 22.11.2014-ம் தேதியன்று கூந்தனி கிராமத்திற்கு இந்த வழக்கின் வாதியை வாரிசாக விடடு இறந்து விட்டார். மல்லிகா இறப்பதற்கு முன்பு இந்த வாதிதான் மல்லிகாவோடு இருந்து மல்லிகாவை பராமரித்தும், பாதுகாத்தும் தாவா சொத்துக்கள் உள்ள ஊரில் மல்லிகாவோடு கடந்த 17 ஆண்டு காலமாக மல்லிகாவோடு இருந்து தாவா சொத்துக்கள் உட்பட பிற சொத்துக்களையும் மல்லிகாவிற்கு துணையாக இருந்து அனுபவம் செய்து வந்தார். மேலும் தாவா சொத்தை விவசாயம் செய்வற்காக இந்த ஆண்டு கடந்த 15.09.2015 அன்ற உழச் சென்றபோது இந்த பிரதிவாதிகள் தமது பெயருக்கு பட்டா உள்ளது என்றும், ஆட்சேபனை செய்தும், இந்த வாதியை பிரதிவாதிகள் மற்றும் அடையாளம் தெரியாத ஐந்தாறு நபர்கள் வாதியை ஊரை விட்டு விரட்டும் எண்ணத்தில் கொலைமிரட்டல் செய்தும், கொடூரமான ஆயுதங்களால் தாக்க வந்ததற்காக வாதி கடந்த 16.09.2015-ம்

தேதியன்று தேவகோட்டை தாலுகா காவல்நிலையத்தில் பிரதிவாதிகளுக்கு எதிராக புகார் கொடுத்துள்ளார். இதனால் வாதிக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தில் வாதியின் சொத்து உரிமைக்கும் அனுபவ உரிமைக்கும் பிரதிவாதிகளின் சட்டவிரோத செயல்பாடுகளால் ஆபத்தும், சலனமும் ஏற்பட்டுள்ளதால் வாதி தனது சொத்து உரிமையையும், அனுபவ உரிமையையும் பாதுகாக்கக்கோரி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

5) இவ்வழக்கில் பிரதிவாதிகள் தரப்பில் அழைப்பாணை அனுப்பப்பட்டு பிரதிவாதிகளுக்கு நீதிமன்றத்தின் மூலமாகவும், அஞ்சல் மூலமாகவும் அழைப்பாணை சார்பு செய்யப்பட்டது. பிரதிவாதிகள் நீதிமன்றத்தில் 30.10.2015ம் தேதி ஆஜராகாததால் பிரதிவாதிகள் தோன்றா தரப்பினராக வைக்கப்பட்டுள்ளனர். அதனடிப்படையில் வாதி தரப்பில் சாட்சியம் உள்ளது. அடிப்படையில் வாதி தரப்பு சாட்சியத்திற்காக வாய்தா போடப்பட்டிருந்தது. அதனடிப்படையில் வாதி தன்னை வா.சா.1 ஆக விசாரித்து கொண்டு வா.சா.ஆ.1 முதல் 20 வரையான ஆவணங்களை குறியீடு செய்துள்ளார். மேலும் வாதி தரப்பில் தனது சாட்சியத்தை நிரூபிப்பதற்காக வா.சா.2 சாட்சியாக விசாரிக்கப்பட்டுள்ளார். அதனடிப்படையில் வாதி தரப்பு சாட்சிகள் முடிக்கப்பட்டு வாதி தரப்பு வாய்மொழி வாதஉரை கேட்கப்பட்டது. அதனடிப்படையிலும் நீதிமன்றத்திற்கு முன் வாதி முன்னிட்டுள்ள சாட்சிய, சான்றாவணங்களின் அடிப்படையிலும் இந்த வழக்கு கீழ்க்கண்டவாறு தீர்மானிக்கப்படுகின்றன.

6) வாதி வழக்கை விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரி தொடர்ந்துள்ளார். இந்த சூழுநிலையில் **வாதி கோரியபடி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வாதிக்கு கிடைக்கத்தக்கதா?** என ஆராய வேண்டியது அவசியம். அதனடிப்படையில் வாதியின் வழக்கை உற்றுநோக்கும்போது தாவா சொத்து ஆதியில் இந்த 1ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டிருந்தாகவும் 04.04.1992ம் தேதி பதிவில்லா கிரையப்பத்திரம் மூலம் சுப்பையா மகன் காசி என்பவர் கிரையம் பெற்று அனுபவம் செய்து வந்ததாகவும், இந்த சூழ்நிலையில் மேற்படி காசியின் மனைவி மல்லிகாவுடன் சாதி வழக்கப்படியும், சம்பிராதயப்படியும் திருமணம் நடைபெற்றது என்றும், காசியின் தாவாச் சொத்து தவிர வேறு சொத்துக்கள் பூர்வீகச் சொத்துக்கள் இருந்தது என்றும், அதனடிப்படையில் பட்டா எண்.156 அடிப்படையில் நில உடமை

குறிப்பேடு வழங்கப்பட்டுள்ளது என்று தெரிவிதது அது வா.சா.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேலும் வேறு சொத்துக்கு காசி பெயருக்கு வழங்கப்பட்ட யு.டி.ஆர். பட்டா 20.08.1987 தேதியது வாசா.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி காசி இறப்பிற்கு பின்னிட்டு அவரது ஒரே வாரிசான மல்லிகா பெயருக்கு பட்டா மாறுதல் செய்யப்பட்டு அதனால் 14.06.2004ம் தேதிய பட்டா மாறுதல் உத்தரவு வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அதனடிப்படையில் ஏற்பட்ட கணினி பட்டா 10(1) வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி காசியின் மனைவி மல்லிகா என்று சொல்வதற்கும், ஒரே குடும்பமாக வாழ்ந்தார்கள் என்று செ்லவதற்கும், வாதியின் குடும்ப அட்டை வா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி மல்லிகாவின் தேர்தல் அடையாள அட்டை, IDBI சேமிப்பு கணக்கு, சிட்டி யூனியன் வங்கியின் சேமிப்பு கணக்கு, பாண்டியன் வங்கியின் சேமிப்பு கணக்கு, தனிநபர் வேலைக்கான அடையாள அட்டை, ஆதார் அட்டை, மருத்துவ அடையாள அட்டை, கலைஞர் காப்பீடு அடையாள அட்டை, சிட்டி யூனியன் வங்கி ஏ.டி.எம். கார்டு, உழவர் பாதுகாப்பு அட்டை முதலியவை வா.சா.ஆ.6 முதல் 15 வரையாக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி மல்லிகா இறந்த பின்னிட்டு விதவை உதவித் தொகை பெற்றதற்கான சான்று வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. இதனடிப்படையில் பார்க்கும் போது 1ம் பிரதிவாதிக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டதாக இருந்தாலும் பதிவில்லாத கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் 92ம் ஆண்டிலேயே கிரையம் கொடுத்து விட்டார் என்று பார்க்கும் போது, மேற்படி சொத்தின் சுவாதீனம் மேற்படி காசி வசம் ஒப்படைக்கபபட்டது என்பதும், அதனடிப்படையில் வருவாய்த்துறை பதிவுகள் ஏற்பட்டது என்பதும் ஊர்ஜிதமாகிறது. மேலும் காசி பெயருக்கு பட்டா பதிவுகள் ஏற்பட்ட பின்னிட்டு அவருடைய ஆயுளுக்கு பின் அவருடைய சட்ட வாரிசான மனைவி மல்லிகாவின் பெயரில் உரிய பட்டா பதிவுகள் மாற்றம் ஏற்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரிகிறது. அதனடிப்படையில் வருவாய்த்துறை ஆவணங்களில் மாற்றம் செய்யப்பட்டுள்ளது என்பது தெளிவாக தெரிய வருகிறது. இதனடிப்படையில் வழக்கை உற்று நோக்கும்போது மேற்படி சொத்தானது சுவாதீனமானது 3 பேர் வசமிருந்து மாறி இந்த வாதி வசம் மாற்றம் செய்யப்பட்டுள்ளது தெளிவாக தெரிய வந்துள்ளது. மேலும் மேற்படி பட்டா மூலம் தனது பூர்வீகச் சொத்தாக அனுபவித்து வந்த மல்லிகா அந்த சொத்தில் உள்ள உரிமை மூலத்தை

நீடானுபவ பாத்தியதை மூலம் உறுதி செய்துள்ளார் என இந்த நீதிமன்றம் அனுமானிக்கிறது. மேலும் இந்த படியாக Possessory title பெற்றுள்ள மல்லிகா அந்த சொத்தை இந்த வாதிக்கு வா.சா.ஆ.18 மூலம் பாத்தியப்படுத்தி உள்ளார் என்பது தெளிவாக தெரிய வருகிறது. மேற்படி உயில் சாசனமானது பதிவு செய்யப்படாத உயில் சாசனமாகும், அந்த உயில் சாசனத்தில் இந்த மல்லிகாவிற்கு பாத்தியப்பட்ட சொத்துக்களை தனது கணவரின் சகோதரி காந்தி அவர்கள் மகனாகிய இந்த வாதிக்கு சொத்தை எழுதி வைத்துள்ளார் என்பது தெளிவாக தெரிய வருகிறது. மேற்படி வா.சா.2ம் தன்னுடைய சாட்சியத்தில் அதை ஒத்தே சாட்சியம் அளித்துள்ளார்.

7) மேற்படி 28.07.2012ம் தேதிய உயில் சாசனமானது வா.சா.ஆ18 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. மேற்படி உயில் சாசனம் அமலுக்கு வந்துவிட்டது என்பதற்கு ஆதரவாகத்தான் இந்த வா.சா.ஆ19 மேற்படி மல்லிகாவின் இறப்பு சான்றிதழ் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அது 27.11.2014. அதனடிப்படையில் மேற்படி சொத்துக்கான உரிமையானது உயில் சாசனப்படி மேற்படி உயிலலின் பயனாளியான இந்த வாதிக்கு மல்லிகாவின் இறப்பிற்கு பின்னிட்டு இந்த வாதிக்கு பாத்தியப்படுத்தப்பட்டுள்ளது என்பது தெளிவாக நிரூபிக்கப்பட்டுள்ளது. மேற்படி மல்லிகா தாவா சொத்தில் வீடு கட்டி வசித்து வருவது சம்பந்தமாக வீட்டு வரி ரசீதுகள் வா.சா.ஆ.16 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளன. இதனடிப்படையில் பார்க்கும் போது வாதியின் கணவருக்கு ஆவணப்படி பதிவில்லாத கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் சுவாதீனம் பெற்றதின் அடிப்படையில் சட்டக்காலத்திற்கு மேற்பட்டு அவர் அனுபவம் செய்து அதன் பின்னிட்டு உரிய பட்டா மாற்றங்கள் காசி பெயரில் ஏற்பட்டு அதன் பின்னிட்டு அவருடைய இறப்பிற்கு பின் மனைவியான மல்லிகா பெயருக்கு பட்டா பதிவுகள் ஏற்பட்டு வந்துள்ளது என்பது அதனடிப்படையில் அந்த சொத்தில் இந்த மல்லிகாவிற்கு Possessory title perfect ஆகியுள்ளது என்பது தெளிவாக தெரிய வந்துள்ளது. எனவே அந்த அனுபவ பாத்திய உரிமையை இந்த வாதிக்கு உயில் சாசனம் மூலம் பாத்தியப்படுத்தி உள்ளார் என்பதும் அந்த உயில் சாசனம் அமுலுக்கு வந்து விட்டது என்பதும் தெளிவாக ஆவணம் மற்றும் வாய்மொழி சாட்சியங்களின் அடிப்படையில் வாதி நிரூபணம் செய்துள்ளார் என்று இந்நீதிமன்றம் முடிவுக்கு வருகிறது. எனவே வாதி தாவா சொத்தில் பாத்தியதை கோருவதற்கான உரிய முதல்நிலைவழக்கும்,

எஞ்சிய சமநிலை வாய்ப்பும் உள்ள நிலையில் வாதி கோருவது போல விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கது என்று இந்த நீதிமன்றம் விடை காண்கிறது.

8) மேற்படி வாதி கோரியுள்ளபடி விளம்புகை பரிகாரம் கிடைக்கத்தக்கது என தீர்மானித்துள்ள நிலையில் மேற்படி சொத்தை வாதிக்கு ஆதரவாக முதல்நிலை பரிகாரமே வழங்கப்பட்டுள்ள நிலையில் பிரதிவாதிகள் மேற்படி விவரத்திற்கு ஆட்சேபனையும், மறுப்பும் தெரிவிக்காத சூழ்நிலையில் வாதி கோரியபடி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்குவதற்கான ஈடுசெய்ய இயலாத கஷ்ட, நஷ்டமும் வாதிபுறம் இருந்து வருகின்ற நிலையில் வாதி கோரியபடி நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கலாம் என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. மேலும் சட்டக்காலத்திற்கு மேற்பட்டு சொத்தில் சுவாதீனம் 3ம் நபர் வசம் இருந்து வருகின்ற நிலையில் மேற்படி சொத்தில் உரிமை கோரும் உரிமையை இந்த பிரதிவாதிகள் இழந்து விட்டனர் என இந்த நீதிமன்றம் தீர்மானிக்கிறது. ( Extinguish of Right)

எனவே வாதி கோரியுள்ளபடி விளம்புகை மற்றும் நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கத்தக்கதென தீர்மானிக்கிறது.

**இறுதியாக வாதி கோரியபடி இவ்வழக்கு செலவுத்தொகையுடன் அனுமதித்து தீர்ப்பளிக்கப்படுகிறது.**

இத்தீர்ப்புரை என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரி பார்த்து பிழைநீக்கம் செய்யப்பட்டு இன்று 2015ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 15ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தேவகோட்டை.

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

| | | | |
|---|---|---|---|
| வா.சா.ஆ.1 | 04.01.1974 | நிலஉடமை குறிப்பேடு | அசல் |
| வா.சா.ஆ.2 | 20.08.1987 | UDR பட்டா | அசல் |
| வா.சா.ஆ.3 | 14.06.2002 | பட்டா மாறுதல் உத்தரவு | அசல் |
| வா.சா.ஆ.4 | 25.01.2007 | 10(1) கம்ப்யூட்டர் பட்டா | அசல் |
| வா.சா.ஆ.5 | ---- | குடும்ப அட்டை | அசல் |
| வா.சா.ஆ.6 | ---- | தேர்தல் ஆணைய அடையாள அட்டை | அசல் |
| வா.சா.ஆ.7 | ---- | IDBI வங்கி சேமிப்பு கணக்கு புத்தகம் | அசல் |
| வா.சா.ஆ.8 | ---- | சிட்டி யூனியன் வங்கியில் சேமிப்பு கணக்கு | அசல் |
| வா.சா.ஆ.9 | ---- | பாண்டியன் கிராம வங்கி சேமிப்பு கணக்கு பாஸ்புத்தகம் | அசல் |
| வா.சா.ஆ.10 | ---- | மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதிச் சட்டப்படி வேலை செய்த‌தற்கான தனிநபர் வேலைக்கான அட்டை | அசல் |
| வா.சா.ஆ.11 | ---- | ஆதார் அடையாள அட்டை | அசல் |
| வா.சா.ஆ.12 | ---- | முதலமைச்சரின் விரிவான மருத்துவ அடையாள அட்டை | அசல் |
| வா.சா.ஆ.13 | ---- | கலைஞர் காப்பீட்டுத் திட்டம் அடையாள அட்டை | அசல் |
| வா.சா.ஆ.14 | ---- | சிட்டி யூனியன் வங்கியின் ATM கார்டு | அசல் |
| வா.சா.ஆ.15 | ---- | முதலமைச்சரின் உழவர் பாதுகாப்புத்திட்ட அட்டை | அசல் |
| வா.சா.ஆ.16 | ---- | வீட்டு வரி ரசீது முறையே சீரியல் (2) | அசல் |
| வா.சா.ஆ.17 | ---- | கணவனை இழந்த விதவை என்பதற்காக உதவித்தொகை | அசல் |
| வா.சா.ஆ.18 | ---- | உயில் சாசன அசல் | அசல் |
| வா.சா.ஆ.19 | ---- | இறப்பு சான்று | அசல் |
| வா.சா.ஆ.20 | ---- | காவல் நிலையத்தில் கொடுக்கப்பட்ட புகார் | அசல் |

**வாதி தரப்பு சாட்சிகள்:**

1. முத்தையா (வாதி)
2. ஆறுமுகம்

**பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள்:** இல்லை.

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
தேவகோட்டை.